www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# தொகுத்தறி மதிப்பீடு – பருவம் I
## சமூக அறிவியல் – 2024 – 2025
## வகுப்பு – 4

பெயர் : ____________ மதிப்பெண்: 60

பிரிவு : ____________ நேரம் : 2 மணி

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5 x 1 = 5

1. நரசிம்மவர்மர் பல்லவ நாட்டின் அரசர் எனில், அவரது ஆட்சிப் பகுதி எந்த ஆற்றங்கரையில் அமைந்திருந்தது?

அ) பொய்கை ஆ) பாலாறு

இ) காவிரி ஈ) வைகை விடை: ____________

2. பாலாற்றங்கரையைச் சுற்றியுள்ள பகுதிகளை ஆட்சி செய்தவர்கள் யார்?

அ) சேரர்கள் ஆ) சோழர்கள்

இ) பாண்டியர்கள் ஈ) பல்லவர்கள் விடை: ____________

3. கவின் வைகை ஆற்றங்கரையில் அமர்ந்து, மீன்பிடித்துக் கொண்டிருந்தான். இந்த ஆற்றங்கரைப் பகுதியை ஆட்சி செய்தவர்கள் யார்?

அ) பாண்டியர்கள் ஆ) சோழர்கள்

இ) பல்லவர்கள் ஈ) சேரர்கள் விடை: ____________

4. முத்துவின் மாமா காவிரி ஆற்றங்கரைப் பகுதியில் உள்ள ஊரில் வசிக்கின்றார். இந்த ஆற்றங்கரைப் பகுதியை ஆட்சி செய்தவர்கள் யார்?

அ) சேரர் ஆ) பாண்டியர்

இ) சோழர் ஈ) பல்லவர் விடை: ____________

5. சேர அரசர்கள் எந்த ஆற்றங்கரையைச் சுற்றியுள்ளப் பகுதிகளை ஆட்சி செய்தனர்?

அ) பொய்கை ஆ) காவிரி

இ) வைகை ஈ) பாலாறு விடை: ____________

II. கோடிட்ட இடங்களை நிரப்புக. 5 x 1 = 5

1. சோழ அரசின் துறைமுகம் ____________.

2. சேரர்களின் கொடியில் உள்ள சின்னம் ____________.

3. ____________ அரசர்கள் வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர்.

4. சேரர்களைப் பற்றி அறிய உதவும் நூல் ____________.

5. ____________ அரசர்கள் உறையூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்தனர்.

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

III. பொருத்துக. 5 x 1 = 5

1. மதுரை - சிவஸ்கந்தவர்மன்
2. பல்லவ அரசர் - நெடுஞ்செழியன்
3. பாண்டிய அரசர் - முத்தமிழ்ச் சங்கம்
4. பாண்டியர்களின் துறைமுகம் - காஞ்சிபுரம்
5. பல்லவர்களின் தலைநகரம் - கொற்கை

IV. சரியா? தவறா? என எழுதுக. 5 x 1 = 5

1. அதியமான் ஔவையாருக்கு நெல்லிக்கனியை வழங்கினார். ________
2. மயிலுக்குப் போர்வை வழங்கிய வள்ளல் பேகன் ஆவார். ________
3. நாடி வந்தோர் பயணிக்கக் குதிரைகளை வழங்கிய வள்ளல் பாரி. ________
4. வல்வில் ஓரி, பாணர்களுக்கு ஊர்களைப் பரிசாகக் கொடுத்தார். ________
5. முல்லைக் கொடி படரத் தன் தேரைக் கொடுத்த வள்ளல் அதியமான் ஆவார். ________

V. வேறுபட்டதை வட்டமிடுக. 5 x 1 = 5

1. குரங்கு, கள்ளி, மான், கிளி.
2. உழவர், ஆயர், இடையர், ஆய்ச்சியர்.
3. மீன், செங்காந்தள், கழுகு, மீனவர்.
4. குறிஞ்சியாழ், மலைத்தேன், முருகன், குவளை,
5. கொற்றவை, இலுப்பை, கள்ளி, கடற்காகம்.

VI. குறிப்புகளை வாசித்து ஐவகை நிலங்களைக் கண்டுபிடிக்க. 5 x 1 = 5

1. மலையும் மலை சார்ந்த இடம் ________
2. உழவர் உழத்தியரை மக்களாகக் கொண்ட இடம் ________
3. கள்ளிச்செடி வளர்ந்திருக்கும் இடம் ________
4. கரடி முயல் வாழும் இடம் ________
5. அலைகள் வந்து மோதும் இடம் ________

VII. ஒரு வார்த்தையில் விடையளிக்க. 5 x 1 = 5

1. தமிழர்களின் முக்கிய கடமையாகக் கருதப்பட்ட செயல் எது? ________
2. சங்க காலத்தில் கொண்டாடப்பட்ட விழாக்களுள் ஒன்றினை எழுதுக. ________
3. சங்க காலத்தில் பயிரிடப்பட்ட தானியங்களுள் ஏதேனும் ஒன்றினை எழுதுக. ________
4. சங்க காலப் பெண்கள் புலியை முறத்தால் அடித்து விரட்டிய செய்தியைக் கூறும் நூல் எது? ________
5. காகத்தைப் புகழ்ந்து பாடிய புலவர் யார்? ________

Scanned with CamScanner

VIII. அட்டவணையில் விடுபட்ட சொற்களை எழுதுக. 5 x 1 = 5

| வரிசை எண் | கருப்பொருள் | நிலம் | |
|---|---|---|---|
| | | நெய்தல் | பாலை |
| 1. | மக்கள் | | எயினர் |
| 2. | தொழில் | | ஆநிரை கவர்தல் |
| 3. | விலங்கு | | யானை, புலி |
| 4. | மலர் | செங்காந்தள் | |
| 5. | பறவை | கடற்காகம் | |

IX. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி. 5 x 1 = 5

வேலங்குடி என்ற கிராமத்தில் பிறந்த ரம்யா, சுமார் 7000 மக்கள் வசிக்கும் பகுதியில் தனது பள்ளிப் படிப்பையும், சுமார் 64,000 மக்கள் வசிக்கும் பகுதியில் தனது கல்லூரிப் படிப்பையும் முடித்தார். பின்னர் மதுரையில் உள்ள ஓர் அலுவலகத்தில் பணியில் சேர்ந்தார்.

1. ரம்யா பிறந்த ஊர், எவ்வகை உள்ளாட்சி அமைப்பினைச் சேர்ந்தது?

அ) கிராம ஊராட்சி ஆ) நகராட்சி
இ) பேரூராட்சி ஈ) மாநகராட்சி விடை: ________

2. ரம்யா பள்ளிப்படிப்பை முடித்த ஊர், எவ்வகை உள்ளாட்சி அமைப்பினைச் சேர்ந்தது?

அ) கிராம ஊராட்சி ஆ) நகராட்சி
இ) பேரூராட்சி ஈ) மாநகராட்சி விடை: ________

3. ரம்யா பணிபுரியும் ஊர், எவ்வகை உள்ளாட்சி அமைப்பினைச் சேர்ந்தது?

அ) கிராம ஊராட்சி ஆ) நகராட்சி
இ) பேரூராட்சி ஈ) மாநகராட்சி விடை: ________

4. ரம்யா பிறந்த ஊரின் மக்கள் தொகை எவ்வளவு இருக்கக்கூடும்?

அ) 5000 க்கும் குறைவு ஆ) 5000 ஐ விட அதிகம்
இ) 50,000 ஐ விட அதிகம் ஈ) 1,00,000 ஐ விட அதிகம் விடை: ________

5. மாநகராட்சியின் மக்கள் தொகை ________

அ) 5000 க்கும் குறைவு ஆ) 5000 ஐ விட அதிகம்
இ) 50,000 ஐ விட அதிகம் ஈ) 1,00,000 ஐ விட அதிகம் விடை: ________

Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

X. வகைப்படுத்துக. 5 x 1 = 5

(வஞ்சி, வில் அம்பு, செங்குட்டுவன், தொண்டி, பதிற்றுப்பத்து)

| | பொய்கை ஆற்றங்கரை அரசு |
|---|---|
| மன்னர் | |
| சின்னம் | |
| நூல் | |
| தலைநகரம் | |
| துறைமுகம் | |

XI. குறுகிய விடையளி.

1. நகராட்சியின் பணிகளில் ஏதேனும் இரண்டினை எழுதுக. (2)

2. நீ மேயரானால், நீ மேற்கொள்ளும் பணிகளில் ஏதேனும் மூன்றினை எழுதுக. (3)

XII. ஐவகை நிலங்களின் பெயர்களையும் அவற்றின் நில அமைப்புகள் பற்றியும் எழுதுக. (1x5=5)

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com